*பிரசார் பாரதி*

*அகில இந்திய வானொலி, சென்னை*

*07 02 2026 SATURDAY 7 15 AM*

*ஆகாஷ்வாணி - <u>செய்திகள்</u>*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

*1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று சதிஷ்கட் மாநிலம் பஸ்தரில் பழங்குடியினரின் பிரம்மாண்ட கலாச்சாரத் திருவிழாவை தொடங்கி வைக்கிறார்.*
*2. ஜம்மு கஷ்மீரில் சர்வதேச எல்லைப் பகுதி பாதுகாப்பு நிலவரங்களை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் □ ா நேரில் ஆய்வு செய்தார்.*
*3. இந்தியா-ஐரோப்பிய யூனியன் வர்த்தக ஒப்பந்தம், ஐரோப்பிய நாடுகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.*
*4. அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தை நல்ல தொடக்கம் என்றும், இதனை தொடர விரும்புவதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.*
*5. உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.*

*>>>>>>>><<<<<<<<*

*குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று சதிஷ்கட் மாநிலம் பஸ்தரில் பழங்குடியினரின் பிரம்மாண்ட கலாச்சாரத் திருவிழாவை தொடங்கி வைக்கிறார்.*

*பழங்குடியின பாரம்பரியத்தின் கலாச்சார சங்கமமாகக் கருதப்படும் இந்த விழா நாளை மறுநாள் வரை 3 நாட்கள் நடைபெறவுள்ளது.*

*இந்த விழாவில் பழங்குடியின சமூகத்தின் வாழ்க்கை முறை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் அவர்களின் செழுமையான கலாச்சார மரபுகள் காட்சிப்படுத்தப்படவுள்ளது.*

*நாட்டுப்புறக் கலைகள், உள்ளூர் மரபுகளை அடிப்படையாக கொண்ட இந்த விழா, பழங்குடியின மக்களின் அடையாளம், பெருமை மற்றும் பாரம்பரியத்தை வலுப்படுத்தும் ஒரு முக்கிய நிகழ்வாக அமையும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*தொடக்கவிழாவில் சத்தீஸ்கர் ஆளுநர் திரு. ரமேன் தேகா, முதலமைச்சர் திரு. விஷ்ணு தியோ சாய், மத்திய இணை அமைச்சர் திரு. டோகன் சாகு உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.*

*>>>>>>>><<<<<<<<*

*மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் □ ா இன்று சத்தீஸ்கட் செல்கிறார்.*

*அம்மாநிலத்தில் மூன்று நாட்கள் பயணம் செய்யவுள்ள அவர், உள்நாட்டுப் பாதுகாப்பு, நக்சல் தீவிரவாதத்திற்கான நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பாக மத்திய மாநில அரசு உயர் அதிகாரிகள் மற்றும் மத்திய ரிசர்வு காவல் படை உயர் அதிகாரிகளுடன் ஆய்வு செய்ய உள்ளார்.*

*தனது பயணத்தின் முதல் நாளான இன்று, ராய்ப்பூரில் மாநில அரசின் மூத்த அதிகாரிகளுடன் மாநிலத்தின் நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்துகிறார்.*

நாளை மறுநாள், பஸ்தார் ஜக்தல்பூரில் நடைபெறும் பழங்குடியினர் கலாச்சாரத் திருவிழாவில் திரு. அமித் □ ா பங்கேற்கிறார்.
தற்போது, ஜம்மு-காஷ்மீரில் பயணம் மேற்கொண்டுள்ள திரு. அமித் □ ா, ஜம்முவில் இன்று பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொள்கிறார்.

நேற்று கத்துவாவில் உள்ள சர்வதேச எல்லைப் பகுதிக்குச் சென்று பாதுகாப்பு நிலவரங்களை ஆய்வு செய்த அவர், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பாதுகாப்பு ஆய்வுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

அப்போது பணியின் போது வீர மரணமடைந்த காவலர்களின் குடும்பத்தினருக்கு அரசுப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இதற்கிடையே, ஜம்மு-காஷ்மீர் தொடர்பான பல்வேறு விவகாரங்கள் குறித்து, பிஜேபி தேசியப் பொதுச் செயலாளரும் யூனியன் பிரதேசப் பொறுப்பாளருமான திரு. தருண் சுக் தலைமையிலான அக்கட்சியின் பிரதிநிதிகள் நேற்று திரு. அமித் □ ா வை சந்தித்துப் பேசினர்.

>>>>>>>><<<<<<<<

ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இந்தியா-ஐரோப்பிய யூனியன் வர்த்தக ஒப்பந்தத்தை விரைவாக அமல்படுத்த முடியும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று அனந்தா மையம் ஏற்பாடு செய்திருந்த முதலாவது இந்தியா-ஐரோப்பிய யூனியன் மன்றத்தின் தொடக்க விழாவில் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்கு இடையிலான பரஸ்பர உணர்வுகளுக்கு மதிப்பளித்தல், பொருளாதார வளர்ச்சி மற்றும் விவசாய நடைமுறைகளில் உள்ள வேறுபாடுகளை அங்கீகரித்தல் மற்றும் நடைமுறைக்கு சாத்தியமான இரு தரப்புக்கும் வெற்றியைத் தரும் முடிவுகளில் கவனம் செலுத்துவதன் அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தினார்.

இந்த ஒப்பந்தம் உலகளாவிய வர்த்தகத்தில் ஒரு குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்கும் என்றும் இரு தரப்புக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

>>>>>>>><<<<<<<<

தெலுங்கானா நகராட்சித் தேர்தலை முன்னிட்டு, "வளர்ச்சியடைந்த தெலுங்கானா என்ற பெயரில் தேர்தல் அறிக்கையை பிஜேபி வெளியிட்டுள்ளது.

ஊழலற்ற, வளர்ச்சி சார்ந்த நகர்ப்புற நிர்வாகத்தை வழங்குவதாக அந்த அறிக்கையில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

நிர்வாக ரீதியிலான ஊழல்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தேர்தலில் வெற்றி பெறுவது உறுதி என்றும் கட்சியின் மாநிலத் தலைமை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

முந்தைய அரசுகள் நிதி ஆணையத்தின் நிதியை மற்ற திட்டங்களுக்குத் திருப்பியதாகக் குற்றம் சாட்டிய பிஜேபி, தங்களது ஆட்சியில் அந்த நிதி முழுக்க முழுக்க உள்ளூர் வளர்ச்சிப் பணிகளுக்கே பயன்படுத்தப்படும் என்றும் கூறியுள்ளது.

>>>>>>>><<<<<<<<

அமெரிக்கா - ஈரான் இடையே உயர்மட்ட அளவிலான பேச்சுக்கள் ஓமன் தலைநகர் மஸ்கட்டில் நேற்று நடைபெற்றது.

கடந்த ஆண்டு ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலுக்குப் பிறகு, இரு நாடுகளுக்கும் இடையே நடைபெறும் முதல் அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தை இதுவாகும்.

ஓமன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. பத்ர் அல்பூசைதி இந்த சமரசப் பேச்சுவார்த்தையை ஒருங்கிணைத்தார்.

இந்த பேச்சுக்கள், ஒரு நல்ல தொடக்கம் என்றும், பேச்சுவார்த்தையைத் தொடர இரு தரப்பும் விருப்பம் கொண்டுள்ளதாகவும் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. அப்பாஸ் அராக்சி தெரிவித்தார்.

எதிர்கால பேச்சுவார்த்தைகள் குறித்த முடிவுகள் அந்தந்த நாட்டுத் தலைநகரங்களில் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். இதில் பெரிய முன்னேற்றங்கள் ஏதும் எட்டப்படவில்லை என்றாலும், பேச்சுவார்த்தை மிகவும் தீவிரமாக இருந்ததாக ஓமன் வெளியுறவு அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த மறைமுகப் பேச்சுவார்த்தையில் ஈரானிய தரப்பில் வெளியுறவு அமைச்சர் திரு. அப்பாஸ் அராக்சி அமெரிக்க தரப்பில் சிறப்பு தூதர் திரு. ஸ்டீவ் விட்காஃப் மேற்கு ஆசியாவுக்கான அமெரிக்க தூதர் திரு. ஜாரெட் குஷ்னர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஈரானின் விருப்பப்படி இரு நாட்டு பிரதிநிதிகளும் தனித்தனியாகவே ஓமன் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினர்.

இந்த பேச்சு வார்த்தையின் போது ஈரான் தரப்பில் அணுசக்தி விவகாரங்கள் மற்றும் பொருளாதாரத் தடைகளை நீக்குவது குறித்து மட்டுமே பேச வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. ஆனால், அமெரிக்கத் தரப்போ ஈரானின் ஏவுகணைத் திறன், ஹிஸ்புல்லா மற்றும் ஹூதி அமைப்புகளுக்கான ஆதரவு மற்றும் ஈரானின் உள்நாட்டு மனித உரிமை மீறல்கள் குறித்தும் விவாதிக்கப்பட வேண்டும் என அழுத்தம் கொடுத்தது.

அணுசக்தி விவகாரங்கள் தொடர்பாக ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால் மீண்டும் ராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் ஏற்கனவே எச்சரித்திருந்த நிலையில், இந்தப் பேச்சுவார்த்தை முக்கியத்துவம் பெற்றுள்ளது

>>>>>>>><<<<<<<<

ரஷ்யாவின் முக்கிய ராணுவ உளவு அமைப்பான GRU வின் துணைத் தலைவரும், மூத்த ராணுவ ஜெனரலுமான விளாடிமிர் அலெக்சியேவ் மாஸ்கோவில் உள்ள அவரது இல்லத்தில் மர்ம நபரால் சுடப்பட்டார்.

வடமேற்கு மாஸ்கோவில் உள்ள ஒரு குடியிருப்பு கட்டிடத்திற்குள் நுழைந்த அடையாளம் தெரியாத நபர், அலெக்சியேவ் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக ரஷ்ய உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

*இதில் படுகாயமடைந்த அவர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*இந்த தாக்குதல் சம்பவத்திற்கு உக்ரைன் காரணம் என்று ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.*

*மஸ்கோவில் செய்தியாளர்களிடம் பேசிய ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. செர்ஜி லாவ்ரோவ், தற்போது நடைபெற்று வரும் அமைதிப் பேச்சுவார்த்தைகளைச் சீர்குலைக்க உக்ரைன் அரசு இத்தகைய வன்முறைச் செயலில் ஈடுபட்டுள்ளதாக கூறினார்*

*>>>>>>>><<<<<<<<*

*உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.*

*இந்தியா, இலங்கை இணைந்து நடத்தும் இந்த தொடரில் 20 அணிகள் பங்கேற்கின்றன.*

*இன்று கொழும்பில் காலை 11 மணிக்கு நடைபெறும் முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் - நெதர்லாந்து அணியை எதிர்கொள்கிறது.*

*பிற்பகல் 3 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் - ஸ்காட்லாந்து அணியை எதிர்கொள்கிறது.*

*மும்பை, வாங்கடே மைதானத்தில் இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா - அமெரிக்காவை எதிர்த்து விளையாடுகிறது.*

*>>>>>>>><<<<<<<<*

*19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கிரிக்கெட் கோப்பையை இந்தியா வென்றுள்ளது.*

*ஹராரே-யில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்தியா, 100 ரன் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது.*

*இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 411 ரன் எடுத்தது.*

*Vaibhav Sooryavanshi அதிரடியாக ஆடி 80 பந்துகளில் 175 ரன் குவித்தார்.*

*412 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் பேட் செய்த இங்கிலாந்து 40 புள்ளி 2 ஓவரில் 311 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.*

*Vaibhav Sooryavanshi ஆட்ட நாயகனாகவும், தொடர் நாயகனாகவும் அறிவிக்கப்பட்டார்.*

*19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கிரிக்கெட் கோப்பையை 6வது முறையாக வென்றுள்ள இந்திய அணியினருக்கு தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

*குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், போட்டி முழுவதும் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, தேசத்திற்கு இளம் வீரர்கள் பெருமை சேர்த்துள்ளதாக தெரிவித்துள்ளார்.*

*குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள பதிவில், இந்த வெற்றி, வரலாற்றுச் சிறப்புமிக்க மகத்தான சாதனை என்று குறிப்பிட்டுள்ளார்.*

*இக்கோப்பையை இந்திய அணி வென்றுள்ளது பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்போட்டி முழுவதும் இந்திய அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.*

*முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில், இப்போட்டியில் வைபவ் சூர்யவன்சி வெளிப்படுத்திய அபாரமான ஆட்டம். பல ஆண்டுகளுக்கு நினைவுகூரப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>>>>><<<<<<<<*

*மிலன் கார்டினா குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.*
*மிலனின் சான் சிரோ மைதானத்தில் தொடக்க விழா நடைபெறுகிறது.*

*போட்டியை நடத்தும் இரண்டு நகரங்களுக்கு இடையிலான ஒற்றுமையை பறைசாற்றும் விதமாக, ஒலிம்பிக் வரலாற்றிலேயே முதல் முறையாக மிலன் மற்றும் கார்டினா டி'அம்பெசோ ஆகிய இரண்டு இடங்களில் ஒலிம்பிக் சுடர்கள் ஏற்றப்படவுள்ளன.*

*>>>>>>>>END<<<<<<<<*